**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 29.06.2016**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 27°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 18°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் பரவலான மழை பெறப்பட்டது.

**வானிலை முன்னறிவிப்புமற்றும் அறிவுரைகள் (29.06.2016 முதல் 03.07.2016)**

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு பரவலான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 82 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 59 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி பொள்ளாச்சி தாலுக்காவில் உள்ள 40 நாட்களான நிலக்கடலைக்கு ஒரு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினால் கார் பருவ நெல் நாற்றாங்காலில் நெல் நாற்றுக்களுக்கு ஏற்படும் பாதிப்பை தவிர்க்க போதுமான வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் நாட்களில் மழையுடன் அதிக காற்றின் வேகம் எதிர்பார்க்கப்படுவதால், ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள கரும்பு மற்றும் வாழைக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி 30 மற்றும் 60 நாட்களுக்கு மேலான மஞ்சளுக்கு ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 72 கிலோ பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இடவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். கரூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் கடைசி இரண்டு நாட்களுக்கு மட்டும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

மற்ற மாவட்டங்களில் வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 35°செ முதல் 36°செ ஆகவும்,குறைந்தபட்ச வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 48 முதல் 70 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 7 கி.மீ முதல் 21 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ நெல் நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 200 கிலோ ஜிப்சம் இடவேண்டும். மேலும், மணிச்சத்திற்கு 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், அடியுரமாக இடவேண்டும். தழைச்சத்து மிகவும் குறைவாக இருக்கும் பட்சத்தில் ஒரு ஏக்கருக்கு 35 கிலோ யூரியா இடவேண்டும்.
- ✓ குறுவை நடவு செய்யும் பொழுது நன்கு வாளிப்பான நாற்றுக்களைப் பெற்று உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் (**Azospirillum**) (1 கிலோ) மற்றும் பாஸ்போபாக்டீரியாவை (**Phospho bacteria**) (1 கிலோ) 40 லிட்டர் தண்ணீரில் இட்டு நாற்றுகளின் வேர் பாகம் கரைசலில் நன்கு நனையுமாறு 15 முதல் 30 நிமிடங்கள் வரை வைத்திருந்து பிறகு 20 x 10 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.
- ✓ நடவு செய்யப்பட்டுள்ள குறுவை நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு புரோபனோபாஸ் (**Profenophos**) 50 இ.சி. 400 மி.லி அல்லது 50 சதம் நனையும் கந்தகத்தூள் (**Wettable sulphur**) 400 கிராம் அல்லது டைக்கோபால் (**Dicopal**) 600 மி.லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. விருதுநகர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 34°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 48 முதல் 75 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 3 கி.மீ முதல் 16 கி.மீ வேகத்தில்வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது நிலவும் வானிலையில் மிளகாயில் காய்த்துளைப்பானின் தாக்குதல் தென்படுகிறது. இப்பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிக்க ஒரு எக்டருக்கு இனக்கவர்ச்சிப்பொறி 12 என்ற அளவில் அமைக்கவும். பாதிக்கப்பட்ட காய்களில் காணப்படும் புழுக்களை சேகரித்து அழிக்கவும். தாக்குதல் தீவிரமாக இருந்தால் ஒரு லிட்டருக்கு குளோர்பைரிபாஸ் (**Chlorpyrifos**) 3 மி.லி என்ற அளவில் தெளிக்கவும்.

- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் வானிலையில் மிளகாயில் இலைப்பேன் மற்றும் அசுவினி போன்ற பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு டைமீத்தோயேட் (**Dimethoate**) 2 மி.லி என்ற அளவில் தெளிக்கவும்.
- ✓ மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையால் தக்காளியில் வெள்ளைஈயின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு டைமீத்தோயேட் (**Dimethoate**)30% EC 1 மி.லி என்ற அளவில் தெளிக்கவும்.
- ✓ வரும் தினங்களில் அதிக வேகத்துடன் கூடிய காற்று எதிர்பார்க்கப்படுவதால் வாழைக்கு முட்டு அணைக்கவும். கரும்புக்கு நட்ட 210வது நாள் பசும்கரும்பு தோகைகளை கொண்டு இரண்டு வரிசைகளை சாயாதவாறு பின்னவேண்டும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை தேனி,புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களில் திண்டுக்கல் புதுக்கோட்டை , சிவகங்கை தேனி ஆகிய மாவட்டங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வறண்ட வானிலையே நிலவுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் மட்டும் 22°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 36°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் மட்டும் 19°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 26°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேரகாற்றின் ஈரப்பதம் 58 முதல் 80 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 21 கி.மீ வேகத்திலும் மற்ற மாவட்டங்களில் 5 கி.மீ முதல் 14 கி.மீ வரையிலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ நெல் நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 200 கிலோ ஜிப்சம் இடவேண்டும். மேலும், மணிச்சத்திற்கு 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், அடியுரமாக இடவேண்டும். தழைச்சத்து மிகவும் குறைவாக இருக்கும் பட்சத்தில் ஒரு ஏக்கருக்கு 35 கிலோ யூரியா இடவேண்டும்.
- ✓ 150 நாட்களான கரும்பிற்கு தோகை உரிப்பதன் மூலம் முன்பருவ நடப்பட்ட கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும்.
- ✓ நிலவும் குறைந்த அளவு வெப்பநிலையால் கால்நடைகள் குறைந்த அளவு தண்ணீர் உட்கொள்ளும். இதை அவ்வப்போது கவனித்து சுத்தமான தண்ணீர் கொடுக்கவும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலோசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 17°செ ஆகவும்,இரவுநேர வெப்பநிலை 11°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரக் காற்றின் ஈரப்பதம் 92 முதல் 94 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 27 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ நீலகிரி மாவட்டத்தில் தொடர் மழை எதிர்பார்க்கப் படுவதால், உரிய வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- ✓ தோட்டக்கலை பயிர்களின் நடவின் போது, ஹெக்டேருக்கு 12 டன் நன்கு மட்கிய தொழு உரம் இடவேண்டும்.
- ✓ மேராக்காய் நடவின் போது, 6 அடி x 8 அடி இடைவெளியில் 45 செமீ கன அளவு குழியில், குழிக்கு 3 காய் வீதம், 10 கிலோ தொழுஉரம், 250 கிராம் யூரியா, 500 கிராம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 500 கிராம் பொட்டஸ் இட்டு நடவு செய்யவும்.
- ✓ கார்னேசன் பயிரில் ப்யூசேரியம் அழுகல் நோயை கட்டுபடுத்த டெபுகொனோசோல் (**Tebuconazole**) 50 % அல்லது ட்ரைப்ளாக்ஸிஸ்டாரடபிண் 25 % கலவை மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து வேர்பகுதியில் ஊற்றவும்.
- ✓ தொடர் மழையின் காரணமாக, கோஸ் மற்றும் காலிபிளவரில் தலை அழுகலை தடுக்க, காப்பர் ஆக்ஸிகுளோரைடு (**Copper oxychloride**) 2 கிராம் லிட்டர் தெளிக்கவும்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 24°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 72 முதல் 78 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது.காற்று மணிக்கு் 6 கி.மீவேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தென்மேற்குபருவமழையின் தாக்கத்தால் மேகமூட்டத்துடன் சாரல் மழை இருக்கும். தொடர்ந்து காற்றின் வேகம் உயர்ந்து நிலவும், பகல் மற்றும் இரவு வெப்பஅளவுகள் கோழிகளுக்கு சாதகமான வானிலையை தொடர்ந்து உருவாக்கும். உற்பத்தியைத் தக்கவைக்க கோழித்தீவனத்திற்கான மூலப்பொருட்களின் கொள்முதல் மற்றும் தரத்தை கவனமாக கண்காணிக்க வேண்டும். மேலும் தீவனம் காற்றில் விரயமாகாமல் தடுக்கும் முறைகளை பின்பற்ற வேண்டும்.

- ✓ *தற்பொழுது உளுந்து பயறுக்கு நல்லவிலை கிடைப்பதால் ஆடிப்பட்டத்தில் விவசாயிகள் உளுந்து சாகுபடியை மேற்கொண்டால் அதிக மகசூல் பெறலாம். குறுகியவயது (**65** நாட்கள்) மற்றும் ஒரேசமயத்தில் முதிர்ச்சி அடையக்கூடிய கோ **6**. வம்பன் **6** அல்லது **8** போன்ற இரகங்களை ஒரு கிலோ விதைக்கு **4** கிராம் டிரைக்கொடேர்மாவிரிடி* ***(Trichoderma viridi)*** *கலந்து விதை நேர்த்தி செய்து விதைப்பு செய்யவும்.*

### 6. வடகிழக்கு மண்டலம்

*அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலான மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை **32**°செமுதல் **33**°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **25**°செ முதல் **26**°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேர காற்றின் ஈரப்பதம் **68** மற்றும் **82** சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் **3** கி.மீ முதல் **9** கி.மீவரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *கொசு மற்றும் பூச்சிகளை விரட்ட நொச்சி, வேம்பு இலைகளை கொண்டு புகை மூட்டம் போட வேண்டும்.*
- ✓ *காய்கறிப்பயிர்களின் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்கம் காணப்பட்டால் **5** சதவீத வேப்பங்கொட்டை கரைசலை தெளிக்க வேண்டும்.*
- ✓ *உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால் கறக்கவும், மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர் தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.*
- ✓ *செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்க வேண்டும்.*

### 7.அதிக மழை பெறும் மண்டலம்

*வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை **30**°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை **24**°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் **83** சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு **20** கி.மீவேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *புதிதாக தயாரிக்கப்பட்ட நிலங்களில் ரப்பர் நடவு செய்யலாம்.*
- ✓ *இஞ்சி : இஞ்சி கிழங்கை, விதைக்கு முன்பு சூடோமோனாஸ் புளூரோசன்ஸ்* ***(Pseuodomonas fluorescens)*** *என்ற பூஞ்சாண மருந்தினை 1 கிலோ கிராம் கிழங்கிற்கு 20 கிராம் என்ற அளவில் நேர்த்தி செய்ய வேண்டும். மேலும் சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் பூஞ்சாணத்தை 1 ஹெக்டருக்கு 10 கிலோ கிராம் என்ற அளவில் இட வேண்டும்.*

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**

**த.நா.வே.ப.கழகம்,கோவை.**